# Tamil Murli Quiz 25-01-2015

தமிழ் முரளி வினாடி-வினா
முரளியினை மறுமுறை நினைவுற உதவும் வினாடி-வினா. இன்றைய முரளியிலிருந்தே கேள்விகள் கேட்கப்படும்.
இங்கே கிளிக் செய்க: 20 நிமிட முரளியின் எம்பி3 கோப்புகள் மற்றும் பழைய வினாடி-வினா.abc

*Q.1)* **சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்:
பிராம்மண வாழ்க்கையின் முன்னேறும் கலைக்கான விஷேச சாதனம் மரியாதையும் ஆகும். அனைவரிடமிருந்தும் மரியாதை பெறுவதற்கு முக்கிய வழி எது?**

A. ○ ஆசீர்வாதம் கொடுப்பது
B. ○ நன்மை செய்வது
C. ○ ஞானத்தை கற்றுக்கொடுப்பது
D. ◉ மரியாதை கொடுப்பது

*Q.2)* **சரியான மூன்று விடைகளை தேர்ந்தெடுக்கவும்
பிரம்மா தந்தை தொடக்கத்திலிருந்தே குழந்தைகளுக்கு ஏன் மரியாதை கொடுத்தார்?**

A. ☑ குழந்தைகள் தன்னை விட உயர்ந்தவர்கள் என்று ஏற்றுக்கொண்டார்.
B. ☐ குழந்தைகள் தான் நன்கு படித்து பாஸ் வித் ஹானர் ஆகிறார்கள்
C. ☑ குழந்தைகள் தான் இரட்டை பூஜைக்கு உரியவர்கள் ஆகிறார்கள்.
D. ☑ குழந்தைகள் தான் சிவபபாவை பிரத்யட்சம் செய்யக்கூடியவர்கள்

*Q.3)* **சரியான மூன்று விடைகளை தேர்ந்தெடுக்கவும்
தன்னுடைய ரெக்கார்டு எப்படி இருந்தது என்பதை எந்தெந்த விஷயங்களில் தன்னைத் தானே சோதனை செய்ய வேண்டும் என்று தந்தை கூறுகிறார்?**

A. ☑ தந்தைமேல் மரியாதை
B. ☑ தந்தை மூலம் கிடைத்திருக்கும் ஞானத்தின் மேல் மரியாதை
C. ☐ தந்தை மூலம் கிடைக்கும் ஸ்ரீ மதத்தின்மேல் மரியாதை
D. ☑ தொடர்பில் வரும் அனைத்து ஆத்மாக்களின் மேல் ஆன்மீக மரியாதை

*Q.4)* **சரியான விடைகளை பொருத்துக**

| | Choice | Match |
|---|---|---|
| A | தந்தைமேல் மரியாதை என்றால் | தந்தையை யதார்த்தமாக அறிந்துகொண்டு அவருடன் அனைத்து உறவுகளின் மரியாதயைக்கடைப்பிடிப்பது |
| B | தந்தையின் உறவுக்கு மரியாதை என்றால் | தந்தையை பின்பற்றி நடப்பது |
| C | ஆசிரியருக்கு மரியாதை என்றால் | படிப்பை இடைவிடாது தொடர்ந்து படிப்பது மற்றும் சரியான நேரத்திற்கு வகுப்புக்கு வருவது |
| D | சத்குருவின் சம்பந்தத்திற்கு மரியாதை என்றால் | உடல் மற்றும் உடல் சார்ந்த உறவுகளை மறந்து உடலற்ற நிலையில் நிலைத்திருப்பது |
| E | பிரிய தர்ஷனனின் உறவுக்கு மரியாதை என்றால் | ஒவ்வொரு எண்ணம் மற்றும் வினாடியில் ஒருவரின் அன்பிலேயே மூழ்கி இருப்பது |
| F | நண்பன் மற்றும் உறவினரின் சம்பந்தத்தின் மரியாதை என்றால் | அனைத்து விஷயங்களிலும் துணையாக இருப்பதன் அனுபவம் செய்வது. |

Q.5) **சரியா தவறா என்று குறிக்கவும்**
**கேட்கிறீர்கள் என்றால் ஒரு தந்தையிடமிருந்து கேளுங்கள், கூறுகிறீர்கள் என்றால் தந்தையின் ஞானத்தை கூறுங்கள், பார்கிறீர்கள் என்றால் தந்தையைப்பாருங்கள், நடக்கிறீர்கள் என்றால் தந்தையுடன் செல்லுங்கள், நினைக்கிறீர்கள் என்றால் தந்தையின் விஷயங்களை நினையுங்கள், செய்கிறீர்கள் என்றால் தந்தை கூறிய உயர்ந்த காரியத்தை செய்யுங்கள். இதுதான் தந்தைக்கு மரியாதை வைப்பது என்ற ரெக்கார்டு ஆகும் .**

A. ◉ சரி
B. ○ தவறு

Q.6) **சரியா தவறா என்று குறிக்கவும்**
**இன்றைய நாட்களில் அற்பகால அதிசயம் செய்து காண்பிக்கும் சாமியார் போன்ற மகான் ஆத்மாக்களை சத்திய வாக்கு கூறும் சுவாமி என்று கூறுகிறார்கள். அப்படிப்பட்டவர்களை படைக்கக்கூடியவர் கூட பரம பிதா பரமாத்மா ஆவார். அவருடைய சத்திய ஞானத்தில் கேள்வி எழுப்புவது கூட ராயல் ரூபத்தின் அவமரியாதை ஆகும்.**

A. ◉ சரி
B. ○ தவறு

Q.7) **சரியா தவறா என்று குறிக்கவும்**
**நான் யாராக இருக்கிறேன் என்பதன் பொருள் நான் உயர்ந்த ஆத்மா ஆவேன், தந்தையின் நேரடிக் குழந்தை ஆவேன், எல்லையற்ற சொத்தின் அதிகாரி ஆவேன், மாஸ்டர் அனைத்து சக்திகளும் நிரம்பியவர் ஆவேன். இதை யதார்த்தமாக புரிந்து நடப்பது தான் தன் மீது தானே மரியாதை வைப்பது ஆகும்.**

A. ◉ சரி
B. ○ தவறு

Q.8) **சரியா தவறா என்று குறிக்கவும்**
**மற்ற ஆத்மாக்களின் மேல் மரியாதை என்றால் மலை போன்ற பெரிய விஷயத்தை பஞ்சு போன்ற சிறிய விஷயமாக ஆக்கவேண்டுமேயன்றி மாறாக பஞ்சு போன்றதை மலைபோல் ஆக்கக்கூடாது . உதாரணம் பலஹீனம் என்ற சிறிய விஷயத்தை மலைபோல் பெரியதாக ஆக்குவது மரியாதை ஆகும்**

A. ○ சரி
B. ◉ தவறு

Q.9) **சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்**
**நாடகத்தின் படி கர்நாடகத்தின் பூமிக்கு எளிதாக _______________ கிடைப்பதற்கான வரதானம் பிராப்தியாகி இருக்கிறது.**

A. ◉ தந்தையின் செய்தி
B. ○ தந்தையின் ஞானம்
C. ○ தந்தையின் ஆசீர்வாதம்
D. ○ தந்தையின் சக்திகள்

Q.10) **இன்றைய சுலோகனின் ஆதாரத்தில் கோடிட்ட இடத்திற்கு சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்**
**நீங்கள் பரமாத்மா தந்தையின் குழந்தை ஆவீர்கள் எனவே உங்களின் புத்தி என்ற கால்கள் எப்பொழுதுமே ______________ இருக்கட்டும்.**

A. ○ மண்ணில் இல்லாமல்
B. ○ மலர்களின் மேல்
C. ◉ சிம்மாசனத்தில்
D. ○ சேவா கேந்திரத்தில்